### 1. குடும்ப ஆதார உதவி

குருட்டு நிலை அல்லது குறைந்த பார்வை இருப்பதாக உறுதியுடன் அடையாளம் காணப்பட்டு உள்ள ஒரு பிள்ளையின் பெற்றோர்களுக்கு இத்திட்டம் ஆதார உதவியினை வழங்குகிறது. இவர்களுக்கான சேவைகளை வழங்கும் குடும்ப ஆதரவுப் பணியாளர்கள் பட்டதாரி மட்டத்தில் தகைமை பெற்றுள்ள சமூக சேவைப் பணியாளர்களாக இருப்பர். பிள்ளை விருத்தியின் மீது கண்பார்வைக் குறைபாடு ஏற்படுத்தும் தாக்கம் சம்பந்தமாக விசேட பயிற்சி பெற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

குடும்ப ஆதார உதவிப் பணியாளர், சம்பந்தப்பட்ட குடும்பத்தினருக்கு பிள்ளையில் உறுதியுடன் அடையாளம் காணப்பட்டு உள்ள மருத்துவ நிலையினை அவர்கள் புரிந்து கொள்ளுதற்கும், அந்த நிலையினால் ஏற்படும் விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ளுதற்கும் உதவி புரிவார். மேலும், குறித்த நிலைக்கான ஆதார உதவிகள் சம்பந்தமாகத் தகவலுடன் கூடிய தீர்மானங்களைப் பெற்றோர் எடுப்பதற்கும் அவர் உதவுகிறார்.

### 2. இடையீட்டு சேவைகள்

கண்பார்வைக் குறைபாடு உள்ள ஒரு பிள்ளையின் விடயத்தில், அவரின் கற்கைத் திறன் மற்றும் விருத்தி ஆகியவற்றுக்கு அவரது தொட்டுணர்வு, செவிப்புலன், மற்றும் அவரிடம் இன்னும் இருக்கும் மீதமான அல்லது எஞ்சியுள்ள பார்வைத் திறன் ஆகியவை தீவிர முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாறான புலனுணர்வுகளைப் பிள்ளை தன்னாலான சிறந்த அளவுக்கு விருத்தி செய்ய அவருக்குக் கண்பார்வை குறைபாட்டுத் துறையில் பயிற்சி பெற்ற, அறிவுடன் கூடிய தொழில்துறை நிபுணர்களின் ஆதார உதவி அவசியமாகத் தேவைப்படுகிறது.

இடையீட்டுச் சேவைகளை (intervention services) விசேட பயிற்சி பெற்ற ஆரம்பகாலப் பிள்ளைப் பருவ குருட்டுநிலை/குறைந்த பார்வை ஆலோசகர்கள் (early childhood blind/low vision consultants) சம்பந்தப்பட்ட குடும்பத்தின் வீட்டில் வைத்து வழங்குகிறார்கள். குறித்த பிள்ளையின் விருத்தியில் பின்வரும் விடயங்களில் பெற்றோர் தமது பிள்ளைக்கு எவ்வாறு உதவி புரிய முடியும் என்று ஆலோசகர் பெற்றோர்களுக்குக் கற்பிக்கிறார்:

- வேண்டும் என்று எண்ணிச் செய்யும் அசைவு (இருப்பு நிலை மற்றும் அசைவு முறை)
- தசைநார் அசைவுத் திறன்களின் விருத்தி (உ-ம்: புரளுதல், எட்டிப் பற்றுதல், தவளுதல், நடத்தல், மற்றும் பொருட்களைக் கையாளுவதிலும் ஆராய்வதிலும் கரங்களைப் பயன்படுத்தல்)
- அன்றாட வாழ்க்கை முறைத் திறன்கள் (உ-ம்: சாப்பிடுதல், ஆடையணிதல், மலசலம் கழித்தல்)
- கருத்து அறிவு விருத்தி (உ-ம்: பொருட்களின் அடையாளம் அறிதல், தொழிற்பாடு மற்றும் அவற்றின் இயல்புகள்)
- சமூக உறவு மற்றும் உணர்ச்சி நிலை ரீதியான விருத்தி
- மொழி மற்றும் தொடர்பாடல் விருத்தி
- எஞ்சியுள்ள கண்பார்வையினை முடிந்த அளவு சிறப்பாக எவ்வாறு பயன்படுத்தலாம்
- விருத்தியை முன்னெடுப்பதற்காக எல்லாப் புலனுணர்வுகளையும் எவ்வாறு பயன்படுத்தலாம்

### 3. ஆலோசனைச் சேவைகள்

உங்கள் பிள்ளை ஒரு பிள்ளைப் பராமரிப்பு நிலையம் அல்லது ஆரம்பகால கற்கைத் திட்ட நிலையம் ஒன்றில் அனுமதிக்கப்படும் பொழுது, அந்த நிலையத்தில் உள்ள ஆரம்பகாலப் பிள்ளைப் பருவக் கல்வியாளர்கள் உங்கள் பிள்ளையுடன் எப்படிச் சிறப்பாகச் செயற்பட்டு அவருக்குக் கற்பிக்கலாம் என்று அறிந்து கொள்வதற்கு குருட்டு நிலை- குறைந்த பார்வை திட்டப் பணியாளர்கள் உதவுவர்.

## பிரதேச வாரியான குருட்டு நிலை – குறைந்த பார்வை ஆரம்பகால இடையீட்டுத் திட்டங்கள்

உங்கள் பகுதியில் இருக்கின்ற சேவை வழங்குநர்களை அறிந்துகொள்வதற்குத் தயவுசெய்து பின்வரும் இணையத்தளம் சென்று பாருங்கள்:

ontario.ca/childvision

To order by phone:
1-800-668-9938
TTY: 1-800-268-7095

Or visit:
www.serviceontario.ca/publications
Publication # 019659

Learn more: www.ontario.ca/children

Nov/2014 © Queen's Printer for Ontario

TAMIL

குருட்டு நிலை – குறைந்த பார்வை ஆரம்பகால இடையீட்டுத் திட்டம்
(Blind – Low Vision Early Intervention Program)



# குருட்டு நிலை அல்லது குறைந்த பார்வை கொண்ட பிள்ளைகளுக்கான சேவைகள்

Ontario



குருடர்களாக அல்லது குறைந்த பார்வையுடன் பிறக்கும் பிள்ளைகளுக்கு முடிந்த அளவு மிகச் சிறந்த ஓர் ஆரம்ப வாழ்க்கையை வழங்கும் விதத்தில், ஒன்ராறியோ மாகாணத்தில் குருட்டு நிலை – குறைந்த பார்வை ஆரம்பகால இடையீட்டுத் திட்டம் (Blind – Low Vision Early Intervention Program) உருவாக்கப்பட்டு உள்ளது. இதன்கீழ் மாகாண அரசின் நிதியுதவியுடன் வழங்கப்படும் விசேடித்த குடும்ப மையச் சேவைகளைப் பிள்ளைகள் அவர்களின் பிறப்பு முதல் பாடசாலையில் தரம் 1 வரையில் பெறக்கூடியதாக உள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆரோக்கியமான விருத்தியை (healthy development) ஊக்குவிக்க உதவக் கூடிய முறையில் பெற்றோருக்கு அறிவு மற்றும் ஆதார உதவி ஆகியவற்றை இத்திட்டம் வழங்குகிறது. பிள்ளைகள் தமது வீட்டிலும் ஆரம்பகால கற்கை மற்றும் பராமரிப்பு சூழல்களிலும் தமது அன்றாட அலுவல்களை செய்வதற்கு அவர்களுக்குத் தேவைப்படும் திறன்களை அவர்களாகவே வளர்த்துக் கொள்ள எவ்வாறு உதவுவது என்று பெற்றோர் இதன் வழியாகக் கற்றுக் கொள்கின்றனர்.

ஆரம்ப வயது தொடக்கம் விசேட ஆதார உதவி எதுவும் இல்லாமல் வளரும் குருடான அல்லது குறைந்த பார்வை உடைய ஒரு பிள்ளை பேசுவதற்குக் கற்றுக் கொள்வதிலும், எதனையும் ஆராய்வதிலும், பாடசாலைக்குப் போவதற்கு ஆரம்பிக்கும் பொழுது அங்கு நண்பர்களை உண்டாக்கிக் கொள்ளவும் சிரமப்படலாம். குருடான அல்லது குறைந்த பார்வை உடைய ஒரு பிள்ளை பின்வருவன உட்பட அதன் விருத்தியின் எல்லா அம்சங்களிலும் கஷ்டங்களை எதிர்நோக்கும் ஆபத்தினைக் கொண்டுள்ளது:

- தொடர்பாடல் மற்றும் மொழி
- நுண்ணிய மற்றும் பாரிய தசைநார் அசைவுத் திறன்கள்
- புரிந்து கொள்ளுதல் மற்றும் சிந்தனைச் செயற்பாடுகள்
- சமூக உறவாடல் திறன்கள்
- உணர்ச்சி விருத்தி
- சுய உதவித் திறன்

திறன்வாய்ந்த துறைசார்ந்த நிபுணர்களின் பொருத்தமான இடையீட்டு உதவியுடன், இவ்வாறான தமது பிள்ளைகளின் ஆரோக்கியமான விருத்திக்கு எப்படி உதவுவது என்று பெற்றோர் கற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பாடசாலையில் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு பிள்ளைகளுக்குத் தேவைப்படும் திறன்களையும் பிள்ளைகள் பயிலுவதற்குப் பெற்றோர் உதவமுடியும்.

## திட்டத்தின் கீழான சேவைகள்

பிள்ளைக்கு குருட்டு நிலை அல்லது குறைந்த பார்வை இருப்பதாக உறுதியுடன் அடையாளம் காணப்பட்டு உள்ளபொழுது ஒரு மருத்துவர், கண்மருத்துவர், பார்வைச் சோதனையாளர், பெற்றோர் அல்லது பராமரிப்பு வழங்குபவர் உள்ளூரில் உள்ள குருட்டுநிலை - குறைந்த பார்வை திட்ட நிலையத்திடம் மேலதிக சேவைக்காகப் பரிந்துரைக்க முடியும். இச்செய்தி மடிப்பு வெளியீட்டின் பின் பகுதியில் உங்களுக்குச் சமீபமாக உள்ள திட்ட நிலையத்தினை நீங்கள் பார்த்து அறிந்து கொள்ள முடியும்.

குருட்டு நிலை – குறைந்த பார்வைத் திட்டத்தின் கீழ் மூன்று வகையான சேவைகள் வழங்கப்படுகின்றன:

1. குடும்ப ஆதார உதவி
2. இடையீட்டு சேவைகள்
3. ஆலோசனைச் சேவைகள்

சிறுவயதில் பிள்ளைகள் வளர்ந்து வரும் பொழுது அவர்களின் கண்பார்வை விருத்தியில் இடம்பெறும் விருத்திக்கான சில மைல்கற்களாகப் பின்வரும் நிலைகள் கருதப்படுகின்றன. இவ்விருத்தி நிலைகளை உங்கள் குழந்தை அடையத் தவறுகிறதா என்று அவதானமாகக் கவனித்துக் கொள்ளுங்கள். இவை சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது கரிசனம் மனதில் தோன்றுமாயின் உ ங்கள் வைத்தியருடன் உடனடியாக அதுபற்றிக் கதையுங்கள்.

உங்கள் பிள்ளையின் கண்பார்வை பற்றி ஏதாவது கரிசனங்கள் உங்களுக்கு இருக்குமாயின் கால தாமதம் செய்ய வேண்டாம். எந்த அளவு சீக்கிரமாக ஒரு பிரச்சினை அடையாளம் காணப்படுகிறதோ அந்த அளவுக்கு விரைவாக, உங்கள் பிள்ளையின் ஆரோக்கிய விருத்திக்கான மிகச் சிறந்த வாய்ப்பினைத் தரும் அவசிய உதவியை உங்கள் பிள்ளை பெற்றுக் கொள்ள முடியும்.



## விருத்திக்கான மைல்கற்கள்

### 6 வார காலத்தில்

· விழித்து இருக்கும் பொழுது சுற்றாடல்களை ஊன்றிக் கவனிப்பார்
· பிரகாசமான வெளிச்சங்களை /பொருட்களை ஒரு சிறிது நேரம் கவனிப்பார்
· வெளிச்சம் முகத்தில் விழும் பொழுது கண் மூடித் திறப்பார்
· கண்களும் தலையும் ஒன்றாகத் திரும்பும்

### 3 மாத காலத்தில்

· கண்கள் ஒரு பொருளில் இருந்து இன்னொரு பொருளுக்கு பக்கவாட்டில் திரும்பும்
· அசைகின்ற ஒரு பொருளினை/மனிதரை கண்கள் பின் தொடரும்
· பராமரிப்பு வழங்குபவரின் முகத்தைத் தொடர்ந்து நீண்டநேரம் பார்க்கிறார்
· கைகளையும் உணவினையும் பார்க்க ஆரம்பிப்பார்

### 6 மாத காலத்தில்

· சுற்றாடல்களைக் கண்காணிக்கும் விதத்தில் கண்கள் அசையும்
· ஒலிகள் உண்டாகும் இடத்தைப் பார்க்க அதன்பக்கம் கண்கள் திரும்பும்
· பொருள்களைக் கை கொண்டு வீசித் தட்டுவார் அல்லது எட்டிப் பிடிக்க முயற்சிப்பார்
· கூடிய தூரத்தில் உள்ள பொருட்களைப் பார்ப்பார்
· நீங்கள் புன்னகை செய்வதை அல்லது சிரிப்பதை பிள்ளை பார்க்கும் பொழுது தானும் புன்னகை செய்வார் அல்லது சிரிப்பார்

### 12 மாத காலத்தில்

· பொருட்கள் மூக்குக்கு சமீபமாக வரும்பொழுது கண்கள் இரண்டும் உள்புறமாகக் குவிய ஆரம்பிக்கும்
· சுற்றாடலில் நடைபெறும் செயற்பாடுகளை நீண்ட நேரத்துக்குப் பார்வையிடுவார்
· கீழே விழ நேரிடும் விளையாட்டுப் பொருளைக் கண்களால் தேடுவார்
· பொருட்களையும் மனிதர்களையும் கண்களால் பரிசீலனை செய்வார்
· விருப்பமான விளையாட்டுப் பொருளை நோக்கித் தவழுவார்

### 2 வருட காலத்தில்

· கண்பார்வையினைச் செலுத்திக் கைகளை அங்கு நகர்த்தி பொருட்களை எட்டிப் பிடிப்பார் அல்லது பற்றிக் கொள்வார்
· ஒரு புத்தகத்தில் உள்ள இலகுவான படங்களைப் பார்வையிடுவார்
· பொருட்களை அல்லது மனிதர்களை கைவிரலால் சுட்டிக் காட்டுவார்
· புத்தகங்களில் உள்ள படங்களைத் தேடுவதுடன் அவற்றைச் சுட்டிக் காட்டுவார்
· நடக்கும் பொழுது அல்லது ஏறும்பொழுது தான் எங்கே போகிறேன் என்பதைப் பார்த்துக் கொள்வார்.

## பார்வைத் திறன் விருத்தியடைந்து முன்னேறும் பொழுது குழந்தைகள் இவற்றில் மகிழ்ச்சி காண்கிறார்கள்:

### 6 வார காலத்தில்

· அவர்களை நீங்கள் அணைத்துப் பிடிக்கும்பொழுது உங்களைப் பார்த்தல்
· பிரகாசமான நிறங்களைக் கொண்டுள்ள விளையாட்டுப் பொருட்களைப் பார்த்தல்
· (கண்ணாடி போன்று) ஒளியைப் பிரதிபலிக்கும் தன்மை கொண்ட பொருட்களைப் பார்த்தல்
· எளிதான கறுப்பு, வெள்ளை வடிவங்கள் கொண்ட அசைவுப் பொருட்களைக் கவனித்தல்
· அசைகின்ற பொருட்களைக் கவனித்தல்

### 3 மாத காலத்தில்

· உங்கள் முகத்தினை உன்னிப்பாகக் கவனித்தல்
· விளையாட்டுப் பொருட்கள் பக்கங்களில் இருந்து தமக்கு முன்புறமாக நகர்வதைப் பார்த்தல்
· தமது தொட்டில்களுக்குக் குறுக்காக மேலே தொங்கும் பொருட்களைப் பார்த்தல் மற்றும் எட்டிப் பற்ற முயற்சித்தல்
· பிரகாசமான நிறங்கள் மற்றும் சுவாரசியமான சித்திரவேலைப்பாடுகள் கொண்ட விளையாட்டுப் பொருட்கள்
· தமது அறைகளில் இரவு விளக்கு ஒன்றினை உபயோகித்தல்

### 6 மாத காலத்தில்

· கண்ணாடி ஒன்றில் தமது பிரதிபிம்பத்தைப் பார்த்தல்
· விருப்பமான இரண்டு பொருட்களை மாறிமாறிப் பார்த்தல்
· வெவ்வேறு நிலைகளில் (positions) இருந்து உலகத்தை பார்வையிடுதல் (உ-ம்: உயரமான கதிரை, நிலம், வேறு தளபாடங்கள்)
· சிக்கலான சித்திரவேலைப்பாடுகள் உள்ள அல்லது அசைகின்ற விளையாட்டுப் பொருட்கள் (உ-ம்: “ பெட்டிக்குள் ஆடும் மனிதன்”)
· முகத்தைக் கைகளால் மூடிப் பின் திறந்து காட்டும் விளையாட்டுகள் (“peek-a-boo” games)

### 12 மாத காலத்தில்

· கொள்கலன்களில் (containers) விளையாட்டுப் பொருட்களை உள்ளும் வெளியிலும் எடுத்துப் போடுதல் (தமது வாயிலும் இதனைச் செய்யக் கூடும்)
· பல்வேறு பருமன்களில் உள்ள ஒரே தோற்றப் பொருட்களுடன் விளையாடுதல் (உ-ம்: வளையங்கள், ஒன்றிலொன்று அடங்கும் கோப்பைகள், நிறக்கட்டிகள்/blocks ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்குதல்)
· தடித்த காகித மட்டைகளால் அமைந்த பக்கங்களைக் கொண்ட புத்தகங்களைப் பார்வையிடல் மற்றும் எளிதான நிறப் படங்கள் பார்த்தல்
· பொத்தான் போன்ற அமைப்புகளை அழுத்தி அல்லது குமிழ்களைத் திருப்பி விளையாட்டுப் பொருட்களைச் செயற்படச் செய்தல்
· ஜன்னல் ஒன்றின் வழியாக வெளியே நடக்கும் செயற்பாடுகளை அவதானித்தல்

### 2 வருட காலத்தில்

· எளிதான காட்சிகள் மற்றும் பொருட்களின் படங்கள் கொண்ட புத்தகங்களை வாசித்தல்
· குடும்பத்து அங்கத்தவர்கள் மற்றும் செல்லப் பிராணிகளின் புகைப்படங்களைப் பார்த்தல்
· அட்டையால் அமைந்த எளிதான வெட்டுப் படப் புதிர்களுடன் (board puzzles) விளையாடுதல்
· விளையாடுவதற்கும் கோபுரங்கள் அமைக்கவும் நிறக்கட்டிகளை உபயோகித்தல்
· கடைகள், பூங்கா, நூல்நிலையம் போன்ற வெளிப்புற ஸ்தலங்களுக்குப் போய் மனிதர்களையும் செயற்பாடுகளையும் அவதானித்தல்

## உங்கள் பிள்ளையின் விருத்தியினை நீங்கள் தொடர்ந்து கண்காணித்து வருதல் அவசியம்

உங்கள் பிள்ளையின் கண்பார்வை விருத்தியினை நீங்கள் தொடர்ந்து கண்காணித்து வருவது அவசியம் ஆகும். ஏனெனில் அதில் ஏற்படும் ஒரு பிரச்சினையை ஆரம்ப நாட்களில் அடையாளம் கண்டு கொள்வதனால் அதனைச் சில வேளைகளில் முற்றாக அகற்றலாம், அல்லது அதனால் விளையும் நீண்டகாலச் சிக்கல் கோளாறுகள் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கலாம். பின்வரும் அறிகுறிகளில் எதனையாவது உங்கள் பிள்ளையிடம் நீங்கள் காண நேரிட்டால் உடனடியாக உங்கள் வைத்தியருடன் அதுபற்றிக் கதையுங்கள்:

· வீக்கமுற்ற அல்லது பீளை படிந்த கண் இமைகள்
· திட்டுகள், புண்கள் அல்லது கண்ணிமைக் கட்டிகள் கண் இமையின் மீது அல்லது அதனைச் சுற்றிக் காணப்படுதல்
· தொங்கி நிற்கும் கண் இமைகள்
· பிறந்து மூன்று மாதங்களில் உங்களுடைய முகக் கண்களைப் பார்க்காத இயல்பு
· பிறந்து மூன்று மாதங்களில் ஒரு பொருளைப் பார்வையிடாத அல்லது கண்களால் பின்தொடராத இயல்பு
· கண்மணியின் உள்ளே மங்கலான அல்லது வெண்ணிறப் படைத் தோற்றம்
· அடிக்கடி கண்விழியில் தோன்றும் பக்கவாட்டு அசைவு, அலைவு அல்லது சடுதியான அசைவு கண்கள் இரண்டுக்கும் இடையே ஒழுங்கமைப்பு இல்லாத நிலை (கண்கள் புரளுதல் அல்லது கண்களில் குறுக்குப் பார்வை நிலை)
· கண்கள் இரண்டும் ஒத்து அசையும் இயல்பில்லாத நிலை
· பொருட்களைப் பார்க்கும் பொழுது ஒரு கண் அலைதல்
· பொருட்களைப் பார்க்கும் பொழுது தலையினைத் திருப்புதல் அல்லது அதனை ஒரு பக்கம் சரித்தல்
· பொருட்களைப் பார்க்கும் பொழுது ஒரு கண்ணில் கூசுதல், இமை மூடுதல் அல்லது கையால் மறைத்தல்
· அழாத நேரங்களிலும் அளவுக்கு அதிகமாகக் கண்ணீர் வடிதல்
· அளவுக்கு அதிகமாகக் கண்இமைத்தல்
· அளவுக்கு அதிகமாகக் கண்ணைத் தேய்த்துக் கொள்ளுதல் அல்லது தொடுதல்
· பிரகாசமான விளக்குகளைத் தவிர்த்தல் அல்லது அவற்றுக்குத் தீவிர உணர்வு காட்டுதல்